
# திராவிடத்தால் வாழ்கிறோம்

967

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## திரைக்கதை வசனம் கலைஞர் மு.கருணாநிதி

குமரன்தாஸ்

29

**திரையுலகில் மாபெரும் புரட்சி செய்த கலைஞரின் கைவண்ணத்தில் உருவான படைப்புகளின் பன்முகப் பரிமாணங்களை விளக்கும் தொடர்.**

# காஞ்சித் தலைவன்; அண்ணாவுக்காக ஒரு திரைப்படம்!

1963-ஆம் ஆண்டு திரைக்கு வந்த படம், ‘காஞ்சித் தலைவன்’. ஏ.காசிலிங்கம் இயக்கத்தில் மேகலா பிக்சர்ஸ் தயாரிப்பில் வெளிவந்து, அன்றைக்குப் பெரிய அளவில் பரபரப்பை ஏற்படுத்திய திரைப்படம். ‘காஞ்சித் தலைவன்’ என்ற படத்தின் பெயரே தணிக்கைத் துறை திரைப்படத்தை வெளியிட மறுப்பதற்குக் காரணமாக அமைந்ததாகச் சொல்வார்கள். ஆனால், படத்தின் தயாரிப்பாளர்களான முரசொலி மாறனும் கலைஞரும் ஏ.காசிலிங்கமும், ‘திரைப்படத்தின் தலைப்பை மாற்ற முடியாது’ என்று சொல்லிப் போராடி, வென்று, ‘காஞ்சித் தலைவனை’ மக்களிடம் கொண்டு சேர்த்தார்கள்.

கலைஞரும் எஸ்.எஸ்.ஆரும் சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்த நேரத்தில் இத்திரைப்படம் வெளிவந்ததால், கதை வசனம் மு.கருணாநிதி எம்.எல்.ஏ. என்றும், எஸ்.எஸ்.ஆர். எம்.எல்.ஏ. என்றும் திரையில் வருவதுடன் புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். எம்.எல்.சி. என்றும் குறிப்பிடப்பட்டிருப்பர்.

வரலாற்றுத் திரைப்படம்போல எடுக்கப்பட்டிருக்கும் இப்படம், தமிழ்நாட்டை ஆட்சிசெய்த பல்லவ மன்னனான நரசிம்ம வர்மனை மையமாகக் கொண்டு கலைஞர் கதையையும் வசனத்தையும் எழுதி இருப்பார். படத்தின் தலைப்புக்கேற்ப, படத்தில் நரசிம்ம பல்லவனின் (எம்.ஜி.ஆர்.) தங்கை பூங்குழலி (ஆர்.விஜயகுமாரி) எம்.ஜி.ஆரை நோக்கி, ‘அண்ணா’ என்று குறிப்பிடும் இடத்திலெல்லாம் கலைஞர் தனது தலைவரும், அண்ணனுமான அறிஞர் அண்ணாவை மனதில் வைத்து, போற்றிப் புகழ்ந்து வசனத்தைத் தீட்டியுள்ளார்.

### கதைச் சுருக்கம்


வாதாபி மன்னன் புலிகேசி (எஸ்.ஏ.அசோகன்) தனக்குக் கப்பம் கட்டும் அரசர்களுடன் சேர்ந்து, காஞ்சியை ஆளும் நரசிம்ம பல்லவ வர்மனை (எம்.ஜி.ஆர்.) வீழ்த்துவதற்கு சதியாலோசனை செய்கிறான். வேனாடு ஏழாயிரம் அரசகுமாரி (பானுமதி) பல்லவனை வீழ்த்த உதவினால், தனது நாட்டுக்குக் கப்பம் கட்டுவதிலிருந்து புலிகேசி விடுதலை அளிக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் நரசிம்மனை வீழ்த்த காஞ்சிக்குப் புறப்படுகிறாள். அவளுடன் துணையாகப் பூவிக்கிரமனையும் (எம்.ஆர். ராதா) புலிகேசி அனுப்புகிறான்.

பூவிக்கிரமன், மதனா என்ற பெயரில் ஒரு சிற்பியாக வேடமிட்டு, பல்லவ நாட்டில் நடமாடி, சதிச்செயல்களில் ஈடுபடுகிறான். அதே நேரத்தில், சோழகுமாரி, நரசிம்மன் இடையே காதல் அரும்ப, சோழகுமாரி அரசனுக்குத் தனது மாளிகையில் விருந்து படைக்கிறாள். புலிகேசியின் திட்டப்படி மதனா, நரசிம்மனுக்கு உணவில் விஷம் கலந்து வைக்கிறான். அந்த உணவை நரசிம்மன் உண்டுவிடாதவாறு சோழகுமாரி தடுத்துவிடுகிறாள்.

அதேபோல சோழகுமாரி மீது பல்லவ நாட்டுப் படைத்தளபதி பரஞ்சோதியும் (எஸ்.எஸ்.ஆர்) சந்தேகப்படுகிறான். அதனால் அரசனையும் எச்சரிக்கிறான். ஆனால், அவனது எச்சரிக்கையைப் பொருட்படுத்தாமல் நரசிம்ம வர்மன் சோழகுமாரியுடன் தொடர்ந்து பழகுவதால், கோபம் கொள்ளும் பரஞ்சோதி, தனது காதலியும் நரசிம்மனின் தங்கையுமான பூங்குழலியிடம் (ஆர்.விஜயகுமாரி) தனது உடைவாளை எறிந்துவிட்டு, அங்கிருந்து செல்கிறான்.

### தனிமைப்படுத்தப்பட்ட நரசிம்மன்

இவ்வாறு நரசிம்ம பல்லவன் தனிமைப்பட்டு விட்ட நிலையை அறிந்துகொள்ளும் சாளுக்கிய அரசன் புலிகேசி, இதுதான் தக்க சமயம் என்று கருதி, காஞ்சி தனக்குக் கப்பம் கட்டாவிட்டால், படை எடுப்பேன் என்று சொல்லி, மன்னனை எச்சரிக்க வேண்டுகிறான்.



படங்கள் உதவி : ஞானம்



சோழகுமாரியும் நரசிம்ம பல்லவனும் காதலிப்பதை அறியும், கொடும்பாவூர் அரசர் முத்தரையர், தனது மகளை நரசிம்ம பல்லவ வர்மன் திருமணம் செய்துகொள்ளாவிட்டால் பல்லவ நாட்டுடனான தமது உறவை முறித்துக்கொள்ளப் போவதாகப் படைத்தளபதி பரஞ்சோதியிடம் கூறுகிறார். அவருக்கு ஆதரவாக உறையூர், கொள்ளிடக்கரை மன்னர்களும் இணைந்துகொள்கின்றனர். இதனால் பல்லவ நாட்டுக்கு ஏற்படப் போகும் ஆபத்தை உணரும் பரஞ்சோதி, நரசிம்ம பல்லவனைச் சந்தித்து, நாட்டு நலனுக்காக சோழகுமாரியுடனான உறவைக் கைவிட்டு, கொடும்பாவூர் முத்தரையர் மகளைத் திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்று சொல்கிறான். ஆனால், நரசிம்ம பல்லவ வர்மனோ மறுக்கிறான்.

“அப்படியானால் உங்களுக்கும் எனக்கும் தனிப்பட்ட குடும்ப உறவு இனி இல்லை. தளபதி என்ற பதவி உறவு மட்டும்தான்” என்று கூறி, பூங்குழலியுடனான தனது காதலை, தான் துண்டித்துக்கொள்வதாகச் சொல்லிவிட்டுப் போகும் பரஞ்சோதி சோழகுமாரியைப் போய்ச் சந்தித்து, “அரசனை விட்டு நீ விலகாவிட்டால், பல்லவ நாட்டின் நலனுக்காக உன்னைக் கொலை செய்யவும் தயங்க மாட்டேன்” என்று கூறி உடைவாளை உருவுகிறான். அப்போது அங்கு வரும் அரசன், பரஞ்சோதியின் கன்னத்தில் அறைகிறான். அதனால் கோபம் கொள்ளும் பரஞ்சோதி இனி, தளபதி பதவியும் தனக்குத் தேவையில்லை என்று சொல்லித் ஓலை அனுப்புகிறான். நரசிம்ம பல்லவன் யுத்தத்தை அறிவிக்கிறான். தனது நண்பனான ஈழ வேந்தன் மானவர்மனைத் தளபதிப் பொறுப்பேற்று படை நடத்திச் செல்லப் பணிக்கிறான். புலிகேசி மானவர்மனை அழைத்து, ‘உனது குழந்தை என்னிடம்தான் உள்ளது. நீ தளபதி பதவியைத் துறந்தால்தான் உனது குழந்தை கிடைக்கும்’ என்று மிரட்டுகிறான்.



> “கதையில் கலைஞரின் வசனங்கள் எதிர்காலத்தைக் கணித்துக் கட்டியங்கூறுவதாக இருக்கும்.”

ஆனால், தனது நண்பனுக்காக மானவர்மன் தளபதியாகப் படை நடத்திச் செல்கிறான். சண்டை நடக்கிறது. பல்லவனின் ஒவ்வொரு கோட்டையாக புலிகேசியிடம் வீழ்கிறது. சோழ அரசி தன்னால்தான் நரசிம்மனுக்கு இந்த அவல நிலை என உணர்ந்து வருந்தி உறையூர், கொள்ளிடக்கரை, கொடும்பாவூர் அரசர்களைச் சந்தித்து, தான் நரசிம்மனை விட்டு விலகிவிடுவதாகவும் அவர்கள் பல்லவ அரசனுக்கு உடனே உதவ வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறாள். அவர்கள் சம்மதிக்கின்றனர். அதேபோல பூங்குழலி பரஞ்சோதியைச் சந்தித்து, நாட்டைக் காக்க போருக்குப் போகச் சொல்கிறாள்.

இதற்கிடையே குல தெய்வம் கொற்றவை கோயிலில், மதனா வெடிமருந்தை வைத்து அங்கு வழிபட வரும் நரசிம்மனைக் கொலை செய்யத் திட்டமிடுகிறான். ஆனால், இடிந்து விழும் கோயிலுக்குள் பூங்குழலி சிக்கி இறந்துபோகிறாள். அதனைக் காணும் நரசிம்மனும் பரஞ்சோதியும் கண்ணீர் சிந்துகின்றனர். வெகுண்டெழும் நரசிம்மனும் பரஞ்சோதியும் ஒன்றுசேர்ந்து புலிகேசியுடன் போர்புரிந்து வெற்றிபெறுகின்றனர். வெல்க நாடு! வெல்க நாடு! என்று வீரர்கள் முழங்குகின்றனர்.

இறுதியில், கொடும்பாவூர் அரசரே மனம் மாறி, நரசிம்ம வர்மனையும் சோழகுமாரியையும் சேர்த்து வைப்பதுடன் படம் முடிகிறது. இதுவே காஞ்சித் தலைவன் திரைப்படத்தின் கதை. இந்தக் கதையில் கலைஞரின் வசனங்கள் எதிர்காலத்தைக் கணித்துக் கட்டியங்கூறுவதாக இருக்கும்.

**...காட்சி விரியும்**

## அடக்குமுறைகளுக்கு அடங்காதவர் பெரியார்!



பெரியார் மீது செருப்பு வீசிய இடத்தில், அவர் வாழ்ந்த காலத்திலேயே சிலை வைக்கப்பட்ட வரலாறு, தமிழ்நாட்டில் உள்ளது. ஆனால், மறைந்து அரை நூற்றாண்டு ஆன பிறகு, அவரது படம் சேதப்படுத்தப்பட்ட இடத்திலேயே கம்பீரமாக உயர்ந்து நிற்கிறார் பெரியார், அதுவும் டெல்லியில். 2023-ஆம் ஆண்டு பிப்ரவரியில், டெல்லி, ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில், தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர்கள் ‘ரிசர்வேஷன் கிளப்’ என்னும் பெயரில் பெரியாரின் கருத்தரங்கத்துக்கு ஏற்பாடு செய்தனர். அதைப் பொறுத்துக்கொள்ள இயலாத, ஆர்.எஸ்.எஸ்.ஸின் மாணவர் பிரிவான ஏ.பி.வி.பி. அமைப்பினர், பெரியார் படத்தைச் சேதப்படுத்தியதுடன், நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்த தமிழ்நாட்டு மாணவர்களையும் தாக்கினர்.

மருத்துவமனை வரை சென்று, தாக்கப்பட்ட மாணவர்களின் சிகிச்சைக்கு எதிராகவும் நின்றனர். ஆனால், இந்த ஆண்டு பெரியாரின் 147-வது பிறந்தநாள் விழா, ஜே.என்.யூ.வில் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டுள்ளது. பெரியாரின் படத்தை ஊர்வலமாக எடுத்துச் சென்று, ‘பெரியாருக்கு வீரவணக்கம்’ என்று ஜே.என்.யூ. மாணவர்கள் தமிழில் உணர்ச்சிகரமாக முழக்கமிட்ட காணொலி, சமூக வலைதளங்களில் வைரலானது. எந்த இடத்தில் பெரியாரின் படம் தூக்கி வீசப்பட்டதோ அதே இடத்தில் இன்று, பிர்சா அம்பேத்கர் பூலே மாணவர் அமைப்பைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மாணவர்கள் இணைந்து, பெரியாரின் படத்தை வைத்து, மாலை சூட்டிக் கொண்டாடி உள்ளனர்.

அன்று எதிர்த்தவர்கள் இன்று அடங்கிவிட்டனர். ‘தனக்கு விளம்பரமே எதிரிகள்தான்’ என்ற பெரியாரின் கூற்று இன்றும் மெய்ப்பிக்கப்பட்டிருக்கிறது. டெல்லியில் கொண்டாட்டம், ஆக்ஸ்ஃபோர்டில் ஆராய்ச்சி என உலகமயம் ஆகியிருக்கிறார் பெரியார்.

## ஃப்ளாஷ்பேக்



### தலைவரிடம் பெற்ற வாழ்த்து!



அன்னபூரணி நடேசன்

2008-ஆம் ஆண்டு, எனது பிறந்தநாளை முன்னிட்டு, தலைவர் கலைஞர் அவர்களை கோபாலபுரம் இல்லத்தில் சந்தித்து, வாழ்த்துப் பெற்றபோது எடுத்த படம். நான் ஒருங்கிணைந்த சேலம் மாவட்டத் துணைச் செயலாளர் பொறுப்பில் இருந்தேன். தலைவர் கலைஞர் அவர்கள் எங்களை வாழ்த்தி விடையளித்தது மறக்க முடியாத நிகழ்வு. இன்றைய கழகத் தலைவர் அவர்களும் கலைஞருடன் இருந்து, எங்களை வாழ்த்தினார். அண்ணன் வீரபாண்டியாரின் அன்புப் புதல்வர் மறைந்த எம்.எல்.ஏ. வீரபாண்டி ராஜா, மேட்டூர் முன்னாள் எம்.எல்.ஏ. பி.கோபால் அவர்களும் உடனிருந்தனர்.

**– அன்னபூரணி நடேசன்,**
**பொதுக்குழு உறுப்பினர்,**
**ஒருங்கிணைந்த சேலம் மாவட்ட**
**முன்னாள் துணைச் செயலாளர், சேலம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## ம.லவூருக

### ஆறுமுகம் குடும்பத்துக்கு உதவி!

1958-ஆம் ஆண்டு கடலூர் மாவட்டம், பூதவராயன் பேட்டையில், தி.மு.கழகத் தொண்டர் ஆறுமுகம் எதிரிகளால் படுகொலை செய்யப்பட்டார். ஆறுமுகம் குடும்பத்தின் பொருளாதாரச் சுமையைத் தாங்கும் விதமாக, ஒன்றேகால் ஏக்கர் நிலம் வாங்கி, அதற்கான பதிவுத் தாள்களை அவரது மூத்த மகன் நவகோடியிடம் வழங்கினார், பேரறிஞர் அண்ணா.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.